வெளிநாட்டுப் பிரயாணம்
திறமையான சேவைக்கும் நம்பிக்கைக்கும், செலவைக் குறைக்கவும்
MCT 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Tele: 24781, 24866

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

ரெலிபோன் ரெலக்ஸ்
24 மணி நேர சேவை
பாதுகாப்பான இடம்
Safe Vehicle Parking
MCT 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Tele: 24791, 24386

கடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஹு ஆனி மீ 24 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வா பிறை 29 (08 07 1986) UTHAYAN- A LIVELY TAMIL DAILY கதிர்: 198

மாகாணசபை யோசனைகளில் முரண்பாடுகள்:

# இந்தியா மூலம் கூட்டணியினர் விளக்கம் கோரினர்

## இலங்கையின் பதில் இன்று டில்லியில் கிடைக்கும்

புதுடில்லி, ஜூலை 8

இலங்கை அரசின் மாகாண சபை யோசனைகளில் உள்ள முரண்பாடுகள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர், இந்தியா மூலம், இலங்கை அரசிடம் விளக்கம் கோரி இருந்தனர்.

இலங்கை அரசு அளித்த விளக்கப் பதில் நேற்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றிடம் கையளிக்கப்பட்டது.

அந்தப் பதில் இன்று (செவ்வாய்) காலை புதுடில்லியில் கிடைக்கும் என்று திரு. டிக்ஸிற் தெரிவித்தார்.

இதே வேளை இலங்கையின் விளக்கப் பதில் எப்படி அமைகிறது என்பதைப் பொறுத்தே தமிழர் விடுதலைக் கூட்டணி, அரசியல் கட்சி மாநாட்டில் பங்குபற்றுவது குறித்து முடிவு செய்யும் என்று கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் புதுடில்லியில் வைத்துச் செய்தியாளர்களிடம் நேற்றுத் தெரிவித்திருந்தார்.

புதுடில்லியில் நேற்று (திங்கட்கிழமை) கூட்டணித் தலைவர்களான திரு அ. அமிர்தலிங்கம், திரு. மு. சிவசிதம்பரம், திரு இரா. சம்பந்தன் ஆகியோர் வெளியுறவு கொள்கை ஆலோசனைக் கமிட்டித் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதி, இணை அமைச்சர் பி. சிதம்பரம் ஆகியவர்களைச் சந்தித்து இந்தியாவுக்குக் கிடைத்த யோசனைகளுக்கும் கொழும்பில் அரசியல் கட்சிகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் குறித்து எடுத்துச் சொன்னார்கள்.

அதனைத் தொடர்ந்து கூட்டணியினர் கோரிய விளக்கங்களைத் தருமாறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வாக்குமூலம் திரித்து எழுத முயற்சியா?

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ் பெரியாஸ்பத்திரியில் தற்போது சிகிச்சை பெற்று வரும் இந்திய மீனவர் வேலுத்தேவர் கணபதியின் வாக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய மீனவர் கொலை குறித்து டிக்ஸிற் கவலை

கொழும்பு, ஜூலை 8.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் நேற்று இலங்கை வெளியுறவு அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து இந்தியாவின் கவலையைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்தியா—இலங்கை உறவுகள் நல்லபடியாக அமைந்துள்ள நேரத்தில் இந்திய மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளன

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மாங்கேணி முகாம் தாக்குதல் குறித்து புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 8

மட்டக்களப்பு மாங்கேணி இராணுவ முகாம் தகர்ப்புச் சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் பின்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

5 ஆம் திகதி நள்ளிரவு 11.45 மணி அளவில் மாங்கேணி இராணுவ முகாம் மீது எம்மால தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது.

இத்தாக்குதலானது தொடர்ச்சியாக 3 மணி நேரம் நடைபெற்றது. 3 மணிநேர உக்கிர மோதலின் பின்பு முகாமின் இடது பக்கமாக உட்புகுந்து எம்மவர் 3 பாரிய கட்டடங்களை முற்றாகத் தகர்த்தனர்.

இதனால் இருந்த அனைவரும் இடிபாடுகளிடையே அகப்பட்டுக் கொண்டனர்.

இத்தாக்குதலுக்கு எம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வர்த்தகர் சங்கம் மீண்டும் கூடும்

யாழ்ப்பாணம், ஜூலை 8

லொறிகளில் கொண்டு வரப்பட்ட பொருள்கள் கொள்ளை இடப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக மேற்கொண்டு என்ன நடவடிக்கைகள் எடுப்பது என்பது பற்றிய யாழ்ப்பாணம் வர்த்தகர் சங்கத்தின் பொதுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப அரசியல் கட்சி மாநாடு என்ன, வேறை என்னதான் நடந்தாலும் உந்த இடை வெளிகள், முரண்பாடுகள், விளக்கங்கள், பதில்கள் அப்ப தொடர்கதை தான் எண்டு சொல்லுங்கோ ,!

### கண்ணிவெடி 3 பொலீஸார் காயம்

மட்டக்களப்பு, ஜூலை 8

மட்டக்களப்பு — திருகோணமலை வீதியில் மாங்கேணி என்னும் இடத்தில் நேற்று மாலை இடம்பெற்ற நிலக் கண்ணி வெடித்தாக்குதலில் 3 பொலீஸார் காயம் அடைந்தார்கள்.

வாழைச்சேனையில் இருந்து ஜீப்பில் பொலீஸார் ரோந்து சென்ற சமயமே இத்தாக்குதலில் சிக்கினர். (இ - எ - 21)

### தமிழ் நாட்டில் 20 பேர் மரணம்

சென்னை, ஜூலை 7

தமிழ் நாட்டின் சேலம் மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற இரு வெவ்வேறு வாகன விபத்துக்களில் 20 பேர் மரணம் அடைந்தனர். (இ)

# யாழ் - கொழும்பு வாகனப் போக்குவரத்து ஸ்தம்பிக்கும் அபாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ் - கொழும்பு போக்குவரத்துச்சேவை ஸ்தம்பிக்கும் அபாயம் உருவாகி வருகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு போகும் பஸ்கள், லொறிகள் ஏனைய வாகனங்கள் பலாலி முகாம் சென்று பாஸ் பெறவேண்டும் என்ற விதியினால் வாகனப் போக்குவரத்து ஏற்கனவே பெரிதும் தடைப்பட்டு விட்டது.

ஒரு சில வாகனங்கள் மட்டுமே பாஸ் பெற்றுக் கொழும்பு செல்கின்றன. அந்த வாகனங்களும் வழி நெடுகிலும் உள்ள முகாம்களில் பசோதிக்கப்படுகின்றன.

மேற் கொண்டு செல்வதற்கு முந்திய ஆயுதப் படை முகாமினரின் அனுமதிக்குரிய ஒப்பந்தத்தைப் பெற வேண்டி உள்ளது.

சில சந்தர்ப்பங்களில் முகாம்களில் அனுமதி ஒப்பம் பெற்றிருந்தாலும் கூட, அடுத்த முகாமில் உள்ளவர்கள் "சில் போடவில்லை" "அனை போட்டுக் கொண்டு வாங்கோ" என்று திருப்பி அனுப்புகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

இதனால் வாகனச்சாரதிகளும், வழியரும் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டி உள்ளது. பஸ்களில் பிரயாணம் செய்யும் பயணிகளும் பல இடங்களிலும் இறங்கி ஏறிச் சிரமப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு போகும் வாகனங்கள் மட்டுமன்றி, அங்கிருந்து வரும் வாகனங்களின் வழியரும், பயணிகளும் இவ்வாறே பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த கஷ்டங்களையும், சிரமங்களையும் முன்வைத்து யாழ் — கொழும்பு வாகனப் போக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பு செல்லும் வாகனங்கள் நாவற்குழி முகாமில் கையெழுத்துப் பெறவேண்டுமாம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

கொழும்பு செல்லும் லொறிகள், பஸ்கள் இனி நாவற்குழி இராணுவ முகாமிலும் கையெழுத்துப்பெற வேண்டும்.

தற்பொழுது பாஸ் எடுத்துச் செல்லும் பஸ்சாரதிகள் லொறிகளுக்கும் சாரதிகளுக்கும் ஆனையிறவு தடை முகாமில் இப்படித் தெரிவிக்கப்படுகிறதாம்.

சோப்பாய்ப் பாலம் சேதப்படுத்தப்பட்டதை அடுத்து 'பாஸ்' வைத்திருக்கும் லொறிகள், பஸ்கள் அண்மைக் காலமாக புத்தூர் பாதையூடாகப் போக்குவரத்தை நடத்தி வருகின்றன.

இவை ஆனையிறவு, கிளிநொச்சி முகாம்களிலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஆசிக்குளம் பகுதியில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூலை 8

வவுனியாவில் உள்ள ஆசிக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை சுற்றிவளைத்துத் தேடுதலில் ஈடுபட்ட ஆயுதப்படையினர் 12 பேரைக் கைது செய்து முகாமிற்குக் கொண்டு சென்றனர்.

சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:

நேற்று அதிகாலை 5 மணி அளவில் சுமார் 300 க்கு மேற்பட்ட சிப்பாய்கள் ஆசிக்குளம் பகுதியைச் சுற்றிவளைத்தனர்.

அங்கு சிப்பாய்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னரில் 8 கடைகள் தீயில் எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

மன்னார் நகரில நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தீயில் எட்டுக்கடைகள் எரிந்தன.

இச்சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:-

கடந்த ஞாயிறு இரவு ஏழு மணி அளவில் மன்னார் பசார் கடற்கரையை அண்டிய பகுதியில் உள்ள தொடர் கடைகளில் திடீர் எனத் தீப்பிடித்துக் கொண்டது.

ஆயுதப் படையினரின் முகாம் அருகில் இருப்பதனால் தீயை அணைக்க எவரும் அப்பகுதிக்கு உடன் செல்லவில்லை.

மன்னார் நகர் மக்கள் சிலர் பொலீஸாருடன் தொடர்பு கொண்ட போதிலும் அவர்களும் செல்ல மறுத்தனராம்.

இதனால் சுமார் 8 கடைகள் தீயில் நாசமாகின. இவற்றின் பெறுமதி 10

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஜீ. சி. ஈ. அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட்டது

கொழும்பு, ஜூலை 8

ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் பரீட்சார்த்திகளுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டு விட்டன.

வடக்கு, கிழக்கு மாகா

(4 ஆம் பக்கம் பார்க்க)

### படுவான் கரையில் கடும் சண்டை

மட்டக்களப்பு, ஜூலை 8

மட்டக்களப்பு, படுவான்கரைப் பகுதியில் நேற்று மாலை படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் மோதல் இடம் பெற்றது.

அப்பகுதியில் இருந்து ஒரே குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

மட்டக்களப்பு நகரில் இருந்து ஆயுதப் படையினர் மோதல் நடைபெறும் இடத்துக்கு விரைந்து சென்றனர்.

இச் செய்தி எழுதப்படும் போதும் சண்டை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. (இ-எ-21)

### தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யவில்லை

புதிய யோசனைகள் பற்றி தொண்டா

சென்னை, ஜூலை 7

இலங்கை அரசின் புதிய யோசனைகள் சிறந்தவையாக இருந்தாலும், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வதாக அமையவில்லை.

இப்படி அமைச்சர் தொண்டமான் தமிழகத்தில் வைத்துச் சொன்னார்.

தமிழர்களின் மேலதிக எதிர்பார்ப்புக்களைக் குறித்து சாதகமாக பரிசீலனை செய்யப் போவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா உறுதியளித்திருப்பதாகவும் திரு தொண்டமான் தெரிவித்தார். (இ-எ)

### 134 பேர் விடுதலை

பூஸா தடுப்பு முகாமில் இருந்து விடுதலை செய்யப்பட்ட 134 தமிழர்கள் கப்பலில் காலியில் இருந்து திருமலைக்கு புறப்பட்டு விட்டனர்.

அக்கப்பல் நேற்று மாலை திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைவதாக இருந்தது.

பூஸா தடுப்பு முகாமில் எஞ்சியுள்ள திருமலைத் தமிழர்களில் ஒரு பகுதியினர் ஜூலை 15 ஆம் திகதி விடுதலை செய்யப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-எ-150)

மண்டைதீவுக் கடலில்

### மீன் பிடிக்கச் சென்றோர்மீது சூடு!

யாழ்ப்பாணம், ஜூலை 8

மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள்மீது மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இதனால் மீனவர் ஒருவர் காயமடைந்தார். ஏனையோர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுக் காலை எட்டு மணி அளவில் மண்டைதீவை அடுத்துள்ள சிறுத்தீவு என்ற இடத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

08 - 07 - 1986
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:-
10 28 முதல் 11 58 வரை
ராகுகாலம்:-
3 58 முதல் 4 28 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## செய்திச் சாரம்

### ராமின் பேரன் சிதைக்குத் தீமூட்டினார்

புதுடில்லி, ஜூலை 7

ஜெகஜீவன்ராமின் இறுதிச் சடங்குகள் பீகார் மாநிலத்தின் சஸ்வார் நகரில் நேற்று நடைபெற்றன.

அவரின் பதினாறு வயதுப் பேரன் சிதைக்குக் கொள்ளி வைத்தார்.

பிரதமர் ராஜீவ், ஜனாதிபதி செயில்சிங் உட்பட பல அரசியல் தலைவர்கள் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டனர். (இ)

### அமிர் அஞ்சலி

சென்னை, ஜூலை 7

பங்களாதேஷ் நாடு, ஜெகஜீவன்ராம் பாதுகாப்பு அமைச்சராக இருந்த சமயம் தான் உருவானது. அவரின் புகழ் பங்களாதேஷ் இருக்கும்வரை நிலைக்கும்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு அ. அமிர்தலிங்கம் கடந்த ஞாயிறு சென்னை வானொலியில் ஜெகஜீவன்ராம் அஞ்சலி நிகழ்ச்சியில் பேசுகையில் சொன்னார். (இ-எ-2)

### ஜப்பானில் ஆளும்கட்சி பெரும்வெற்றி

டோக்கியோ, ஜூலை 7

ஜப்பானியத் தேர்தலில் பிரதமர் நாகசோனி தலைமையிலான ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி பெரும் வெற்றியீட்டியது.

மொத்தம் 512 தொகுதிகளில் 300 தொகுதிகளை இக்கட்சி கைப்பற்றியது. (இ)

யோசனைகளைப்படித்துப் பார்க்க

### சுதந்திரக் கட்சிக்கு மேலும் அவகாசம்

கொழும்பு, ஜூலை 8

மாகாண சபை யோசனைகளைப்படித்துப் பார்க்க சுதந்திரக் கட்சிக்கு மேலும் அவகாசம் வழங்கப்பட்டுளது.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா இக்கால அவகாசத்தை வழங்கியிருக்கிறார்.

யோசனைகள் பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்க அரசியல் கட்சிகளுக்கு ஜூலை 11 வரை அவகாசமளிக்கப்பட்டது.

ஆனால் சுதந்திரக் கட்சிச் செயற்குழு யோசனைகளைப் பரிசீலனை செய்ய கால அவகாசம் போதாது என்று தீர்மானித்து அறிக்கையும் வெளியிட்டது.

அதைத் தொடர்ந்தே ஜனாதிபதி கால அவகாசம் வழங்கியுள்ளார். (இ-எ-1)

திறப்பு விழா

இன்ரநேஷனல் கொம்யூனிக்கேஷன் கொம்பிளக்ஸ்
TELEPHONE — TELEX SERVICE
இல: 282A, யாழ்ப்பாணம் வீதி,
மானிப்பாய்

9—7—1986 காலை 6 மணியளவில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களினால் திறந்துவைக்கப்படும்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை அபிவிருத்திக்கு ஐந்தாண்டுத் திட்டம்

## நடவடிக்கைகள் பத்து மடங்காகும்

யாழ்ப்பாணம், ஜூலை 8

பனை அபிவிருத்திச் சபை ஐந்தாண்டுத் திட்டமொன்றை உருவாக்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பனை அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் பத்து மடங்காக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டம் பல்வேறு தொழில்துறை இலக்குகளைக் கொண்டுள்ளதென்றும் -

இதன்மூலம் பலர் வேலைவாய்ப்புப்பெற வழி வகுக்கப்பட்டுள்ளதெனவும் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா தெரிவித்தார்.

பொதுமக்கள் விசேடமாக இளைஞர்கள் பனை அபிவிருத்தியில் அதிக ஆர்வம் காட்டி வந்ததாலும் -

நீண்டகால செயற்திட்டமொன்று வகுத்துச் செயற்படவேண்டிய அவசியம்பற்றி நிபுணர்கள் வற்புறுத்தி வந்ததாலும் இத்திட்டம் தயாரிக்கப்பட்டதென சிரேஷ்ட நிர்வாகசேவை அதிகாரி திரு. சே. திருலிங்கநாதன் தெரிவித்தார். (உ-ஓ)

### இணைப்புக்குழு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 8

தோலகட்டியைச் சேர்ந்த மறைந்த துறவி சபைக்குரிய சகோதரர் வெவெசெல்வோன், அமரர் சரத் முத்தட்டுவேகம ஆகியோருக்கு நேற்று நல்லூர் இந்து வீதியில் நடைபெற்ற யாழ் பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழுக் கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

துறவியின் மரணத்தை யிட்டு அரசுக்கு தமது கண்டனத்தையும் சரத் முத்தட்டுவேகமவின் மனைவியாருக்கு அனுதாபத்தையும் குழு தெரிவிக்க வேண்டும் என்வும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (உ-5)

### பெண் விடுதலை இன்றேல் முழுவிடுதலை கிடையாது

#### தமிழ்த்தின விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 8

பெண் விடுதலை பற்றி சிந்திக்காதவரையில், இலங்கைத் தமிழர்கள் ஓர் முழுமையான விடுதலையை பெறமுடியாது.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் சித்திரலேகா மௌனகுரு கூறினார்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி தமிழ் மன்றம் நடத்திய தமிழ்த்தின விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

முழுமையான சமூக விடுதலை ஒன்றின் மூலமே பெண் விடுதலை சாத்தியம்.

இந்திய, இலங்கை சுதந்திரப் போராட்டங்களின்போது காணப்பட்ட பெண்கள் பற்றிய புதிய சிந்தனைகள், பின்னர் மழுங்கடிக்கப்பட்டு விட்டன.

இதற்கு காரணம் நாம் பெற்ற வெறும் அரசியல் விடுதலையே.

முழுமையான சமூக விடுதலையின் படிக்கட்டுகளாக எமது செயலாக்கங்கள் அமைதல் வேண்டும்.

பெண்கள் தனிப்பட்ட ரீதியில் போராடாது, முற்போக்கு சக்திகளுடன் இணைந்து போராட வேண்டும். —இப்படி அவர் கூறினார்.

கல்லூரி அதிபர் திருமதி ஜெயவீரசிங்கம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். (க-5)

### 20 ஊர்காவலர் சிக்கியது பற்றி
## புலிகளின் அறிக்கை ஊர்ஜிதமானது

கொழும்பு, ஜூலை 8

வாஞுறுப் பகுதியில் உள்ள முஸ்லிம் ஊர்காவல் படையினரிடமிருந்து 26 துப்பாக்கிகளையும் 390 சுற்றுரவைகளையும் தீவிரவாதிகள் கடந்த வியாழன் இரவு கைப்பற்றினர்.

இப்படி பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட அறிக்கையை அமைச்சு வட்டாரங்களின் தகவல் ஊர்ஜிதம் செய்தது.

முதலில் ஆயுதந்தரித்த தீவிரவாதிகள் சினன்வாடிப் பொலீஸ் பகுதியில் கொக்கிக் கொட்டத்தீவில் உள்ள ஊர்காவல் படையின் சோதனை முகாமை முற்றுகையிட்டு 6 துப்பாக்கிகளையும் 109 சுற்று தோட்டாக்களையும் பறித்தனர்.

பின்னர் குரங்கல் மணியரசன்குளம், ஆயிலகடி ஆகிய இடங்களில் கடமையில் இருந்த ஊர்காவல் படையினரிடமிருந்து மிகுதி துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் கைப்பற்றினர்.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)


## பிரயாண ஒழுங்குகள்

- கனடா
- ஜேர்மன்
- பிரான்ஸ்
- டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும் மற்றும்
பாஸ்போட், விசா, பொன்ட் (BOND), ரிக்கட் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்

டென்மார்க் — கனடா

ஆகிய இடங்களுக்கு கொழும்பிலிருந்து நேரடிப் பயண ஒழுங்குகள் செய்யப்படுவதால் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

**INTERSUN GROUP**

சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.


### உ. அ. அதிபர்கள் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

இம்மாதம் தொடக்கம் சில உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் உதவி அரசாங்க அதிபர்கள் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான இடம் மாற்றத்தை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி இம்மாதம் முதல் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு செல்வி மைதிலி சோமசுந்தரமும் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு திரு. கி. சந்திரசேகரமும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு திரு. ஏ. அரியரத்தினமும் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-5)

### ஊழியர் விவரம் சேகரிப்பு

மட்டக்களப்பு ஜூலை 8

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் போக்குவரத்துப்பிரச்சினைகள் காரணமாக வேலைக்குச் செல்ல முடியாது உள்ள அரச ஊழியர் பற்றிய விவரங்களை சமர்ப்பிக்கும்படி அரசாங்க அதிபர்களை, தேசியபாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது. (உ-21)

### வெள்ளி விழா காணும் துறவிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 8

அமலமரித்தியாகிகளின் முதல்வரான அருட்திரு கலாநிதி லூயிஸ் பொன்னையா அடிகளினதும் அவரது உடன் சகோதரியான அருட்செல்வி திரேஸ் கிரேஸ் பொன்னையா (அப்போஸ்தலிக்க காமல் சபை) அவர்களினதும் துறவற வாழ்வின் வெள்ளி விழா எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5-00 மணிக்கு சுண்டிக்குளி புனித் ஸ்நாபக யுவானியார் ஆலயத்தில் நடைபெறும். (இ)

### விழிப்புலனற்றோர் ஆண்டு விழா

சாவகச்சேரி, ஜூலை 8

விழிப்புலனற்றோர் சங்க பத்தாவது ஆண்டு நிறைவு விழா கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் திரு க. விஜயராசசிங்கம் தலைமையில் ஆரம்பமான இக் கூட்டத்தில் யாழ் பிரசைகள் குழுத் தலைவர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சமூகசேவைப் பகுதி உதவி அத்தியட்சகர் திருமதி சிவசிதம்பரம் நவீல்ட் பாடசாலை உதவி அதிபர் திரு ஏ. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (இ-31)

# 20 ஆயிரம் அகதிகளுக்கு உடன் உதவி தேவை

## பொதுநல ஸ்தாபனங்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 8

அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற அசம்பாவிதங்களால் இடம் பெயர்ந்துள்ள சுமார் 20 ஆயிரம் அகதிகள் பொதுநல ஸ்தாபனங்களின் உதவியை எதிர்பார்த்து நிற்கிறார்கள். அவர்களுக்கு உடன் உதவி தேவை.

கிளிநொச்சி அத்தியாவசிய சேவைக் குழுத் தலைவர் எம். இராமநாதன் இப்படிக் கூறினார்.

யாழ் பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்களால், கிளிநொச்சி, உருத்திரபுரம், ஜெயந்திபுரம், திருநகர் போன்ற இடங்களிலுள்ள சுமார் 20 ஆயிரம் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்களை அயல் ஊர் மக்களே பாடசாலைகளிலும் தேவாலயங்களிலும் தங்க வைத்துப் பராமரித்து வருகின்றனர்.

இவர்களுக்கு அரசு எந்தவிதமான உதவியுமே செய்யவில்லை.

பொது மக்கள் கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் செல்ல முடியாதிருக்கிறது.

அகதி முகாம்களில் கொடுக்கப்படும் மருந்துகளையே பொது மக்களும் பெறுகிறார்கள்— இப்படி அவர் கூறினார். (உ-5)

## சமுதாய நோய்களை கலை நிகழ்ச்சிகளால் களைய முடியும்

வட்டுக்கோட்டை, ஜூலை 8

எமது சமுதாயத்தில் ஒற்றுமையற்ற நிலைமை, சுயநலமுள்ள தன்மை, இறைப்பற்று அற்ற நிலை போன்ற இன்னோரன்ன நோய்கள் காணப்படுகின்றன. இச்சமுதாய நோய்களை நீக்க நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும். கலைநிகழ்ச்சிகள் இந்நோய்களை நீக்கப் பெரிதும் உதவுகின்றன.

வட்டுப்கோட்டைகலா நிலையத்தில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய நவாலி சேகரக்குருக்கள் டி. ஆர் அம்பலவாணர் மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டை கலாநிலைய முதல்வரும், இசைப்பாறிய அதிபருமான திரு கே. கயிலாயநாதன் தலைமையில் இந் நிகழ்ச்சி நடைபெற்றது.

நவாலி சேகரக்குருக்கள் டி. ஆர். அம்பலவாணர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது;

இன்றைய இளைஞர்களது பெருமுயற்சியால் விரைவில் எமக்கு உரிமை கிடைக்கும் என்பது நம்பிக்கை. சுதந்திரப் போராட்டத்தில் மக்கள் மத்தியில் பலர் இறக்க வேண்டியநிலை ஏற்படத்தான் செய்யும். இதற்காகப் போராட்டத்தை நிறுத்திவிட முடியாது.

இப்படி அவர் கூறினார்.

செல்வி ரஞ்சினி தங்கராசாவின் நடனநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (இ-161)

### ஜி.சி.ஈ பரீட்சை

மட்டக்களப்பு, ஜூலை 8

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை நடைபெற மென தெரிவிக்கப்படுகின்றது.

இம்முறை பரீட்சை நேர அட்டவணையில் கொண்டுவரப்பட்டுள்ள மாற்றத்தின்படி பாடமொன்றின் 1-ம் 2-ம் பாகங்கள் ஓரே நாளில் நடைபெறமாட்டா. இரு நாட்களில் நடைபெறும். (இ-)

### மாணவர் பட்டியல்

மட்டக்களப்பு, ஜூலை 8

எதிர்வரும் கல்வி யாண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களின் பெயர் பட்டியல் இம்மாத நடுப் பகுதியில் வெளிவருமென தெரியவருகின்றது.

ஆகஸ்ட் 1ஆம் திகதி க. பொ. த. உயர்தர பரீட்சை ஆரம்பமாக முன்பு இப்பட்டியல் வெளிவந்துவிடும்.

பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் கல்வியாண்டு அக்டோபர் மாதம் ஆரம்பமாகுமென்பது குறிப்பிடத்தக்கது. (உ-21)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### முக்கிய அரசியல் கட்சிகளுக்கு
## பெரும்பான்மையினர் ஆதரவு பெற தமிழர் பிரச்சினை ஒரு தூண்டில்

### நினைவுப் பேருரையில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 8

இந்தத் தீவின் முக்கியமான அரசியற் கட்சிகள் பெரும்பான்மைச் சமூகத்தின் ஆதரவை இலகுவில் பெற்றுக் கொள்வதற்குத் தமிழர் பிரச்சினையைத் தூண்டிலாகப் பயன்படுத்துகின்றன.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை நினைவுப் பேருரை ஆற்றிய யாழ் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை இவ்வாறு குறிப்பிட்டார்.

அதிபர் திரு அ. நாகராசா தலைமை வகித்தார். யாழ் கல்விப் பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராகப் பங்கு பற்றினார்.

'சுதந்திர காலத்துக்கு முன்பு வாழ்ந்த தமிழ்த் தலைவர்கள் இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தைப்பற்றி முன்னோக்காகச் சிந்தித்து ஆங்கிலேயர் இத்தீவைவிட்டு வெளியேற முன்பு தக்க அரசியற் கோரிக்கைகளை முன்வைக்கத் தவறியமை இலங்கைக்குப் பெரிய துரதிஷ்டமாகும்.

ஆங்கிலேயர் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கியபோது விட்டுச் சென்ற ஒற்றையாட்சி முறை முழுக்க முழுக்கப் பெரும்பான்மைச் சமூகத்தினரின் ஆட்சியாகவே தொழிற்படுகிறது.

சமத்துவமும், சுயமரியாதையும் பெற்றுக் கொள்வதற்காகச் சிறுபான்மைச் சமூகத்தவர் முன்வைக்கும் அரசியற் கோரிக்கைகள் பெரும்பான்மைச் சமூகத் தலைவர்களாலே வெறுப்புடனும் கோபத்துடனும் நிராகரிக்கப்படுகின்றன.

இலங்கைத் தமிழர்களின் பாரம்பரியத் தாயகத்திலே யாழ்ப்பாணக் குடாநாடு ஒரு சிறு பகுதியே ஆயினும் இக்குடாநாடே முற்காலயாழ்ப்பாணத் தமிழ் இராச்சியத்தின் கேந்திர பூமியும், மிகவும் அர்த்தமான சனத்தொகை உள்ளதும், கல்வியிலே மிகவும் அபிவிருத்தி அடைந்துள்ளதுமாகும்.

யாழ்ப்பாணம், யாழ்ப்பாணத்தவர் என்ற சொற்களுக்குக் குறுகிய ... ஆயினும், இலங்கையில் உள்ள பிற சமூகத்தவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய பிரதேசத்தை யாழ்ப்பாணம் எனவும், இலங்கைத் தமிழர்களை யாழ்ப்பாணத்தவர் எனவும் ஏகதேசமாக வழங்குவதை இன்றும் காணலாம்.

துரதிஷ்ட வசமாக கூட்டாட்சி முறைக்கான கோரிக்கை காலத்தாழ்த்தியே முன்வைக்கப்பட்டது.

சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பு இந்தக் கோரிக்கை தமிழ்த் தலைவர்களால் முன்வைக்கப்பட்டு இருந்தால் இன்றைய இலங்கை வரலாறு அண்மைக் காலத்தில் இருந்ததிலும் வேறுபட்டு அமைந்திருக்கலாம்.

—இவ்வாறு பேராசிரியர் வேலுப்பிள்ளை தான் நிகழ்த்திய நினைவுப் பேருரையில் தொடர்ந்து கூறினார்.

கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. நா. சிவராசா நன்றியுரை கூறினார். (உ-9)

### பிரசைகள் குழு ஒன்றியம்:
## அரச படைகளின் தாக்குதல்களுக்கு கண்டனம்

காங்கேசன்துறை, ஜூலை 8

அரச படைகள் பொது மக்களுக்கு எதிராக தாக்குதல்களை நடத்துவது கண்டிக்க வேண்டியது ஆகும்.

இப்படியான தீர்மானம் ஒன்றை வலி-வடக்கு பிரசைகள் குழுக்களின் ஒன்றியம் நிறைவேற்றி உள்ளது.

மேற்படி இணைப்புக் குழுக் கூட்டம் தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் துணைத் தலைவர் திரு அ. குமரகுரு தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பின்வருமாறு பிரசைகள் குழுவால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:

* மண்டைதீவுக் கொலைகளுக்கு கண்டனம்.

* யாழ் கோட்டையிலிருந்து மக்கள் குடியிருப்புகளின் மீது ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கும் வல்வெட்டித்துறையின் மீது தரை, கடல், வான் ஆகிய மும்முனைகளிலிருந்தும் தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கும் செம்பியன்பற்று காரைநகர், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் தாக்குதல்கள் நடத்தப்பட்டதற்கும் கண்டனம்.

* மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் 12-7-86ல் தொடங்க இருப்பதால் இராணுவ நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி உதவும்படி யாழ் அரசாங்க அதிபரை கோருதல்.

* மயிலிட்டி வடக்கு, கட்டுவன், குரும்பசிட்டி பகுதிகளில் இருந்து வெளியேறிய ஏழை மக்களுக்கு உதவ நிதி திரட்டல். (இ-68)

### நிதி உதவி

மண்டைதீவு, ஜூலை 8

மண்டைதீவுப் பகுதியில் இராணுவத்தினரால் சுடப்பட்டு மரணமானவர்களின் குடும்பங்களுக்கு நன்கொடை வழங்கும் திட்டம் ஒன்றை மண்டைதீவு பிரசைகள் குழு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை இறந்த ஐந்து பேர்களின் குடும்பங்களுக்கு 500 ரூபா விதம் நன்கொடையாக பிரசைகள் குழு தலைவரும் புனித பேதுரு வானவர் தேவாலய பங்குத்தந்தையுமான அருட் திரு வண பிதா யோ. சமிலஸ் நிமலன் அடிகள் வழங்கினார்.

இத் திட்டத்தை செயல்படுத்துவதற்குரிய நிதியை யாழ் மனித முன்னேற்ற நடுநிலையம் கையளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (உ-68)

### திருமலையில் கொள்ளை

திருகோணமலை, ஜூலை 8

திருமலை நகரில் பிரபல நகைமாளிகை உரிமையாளரான திருமதி கிருஷ்ணசாமியின் இல்லத்தினுள் நுழைந்த அவர் அணிந்து இருந்த தங்கச் சங்கிலி, காப்பு, மோதிரம் முதலியனவற்றை முகமூடி அணிந்த இரண்டு பேர் கொள்ளையிட்டுச் சென்றனர்.

திருகோணமலை தக்கியா லேனில் ஞாயிறு காலை 10 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

முகமூடி அணிந்த இரண்டு நபரும் சிங்களத் பேசி ஆயுதமுனையில் இக் கொள்ளையை நடத்திய தாகப் பொலீஸாருக்கு முறையிடப் பட்டுள்ளது. (உ-எ.150)

### போராளிகளைச் சந்திக்க
## விஜய குமாரணதுங்க வடக்கே வரலாம்

கொழும்பு, ஜூலை 8

இலங்கை மக்கள் கட்சிச் செயலாளர் திரு. விஜய குமாரணதுங்க வடக்கு மாகாணத்திற்கு போராளிக் குழுக்களைச் சந்தித்து சமாதானப் பேச்சுக்கள் நடத்த இருக்கின்றார்.

இரண்டாவது தமிழ் நாடு விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னரே, திரு. விஜய குமாரணதுங்க வடபகுதி விஜயத்தை மேற்கொள்ள விருப்பதாக அவரின் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு விஜய குமாரணதுங்க, தனது முதலாவது தமிழக விஜயத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு வி. பிரபாகரனைச் சந்திக்கவில்லை.

தனது இரண்டாவது விஜயத்தில் திரு. பிரபாகரனை சந்திக்க முடிவு செய்திருக்கிறார். (இ-எ-2)

### யாழ் தபால் நிலையத்தில்
## முகக்கிய வேலைகள் நடைபெறுததால் பொதுமக்கள் கஷ்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் திறக்கப்பட்ட தபால் அலுவலகத்தில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக முத்திரை விற்பனை, பரீட்சை பற்றுச்சீட்டு, வெளிநாட்டுத்தரவுப் பத்திரம், தந்தி, காசுக்கட்டளை, அஞ்சல் கட்டளை, தேசிய சேமிப்பு வங்கிக் கொடுப்பனவுகள் ஆகியவை சம்பந்தமான வேலைகள் நடைபெறவில்லை.

இதனால் பொதுமக்களும் ஊழியர்களும் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள்.

இதேவேளை தீவுப் பகுதியில் இருந்தும் பருத்தித்துறை காங்கேசன்துறை போன்ற தூரப் பகுதிகளில் இருந்தும் வரும் பொதுமக்கள் யாழ்ப்பாணம் கோட்டையில் அமைந்துள்ள அஞ்சல் அலுவலகத்திற்கு பணம் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு செல்லும்போது அங்கு பணம் இல்லை என தெரிவிக்கப்படுகிறதாம்.

இது தொடர்பாக யாழ். பிரதம அஞ்சல் அதிபருக்கு முறையீடும் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

அரச தபால் அலுவலகங்களில் அடிக்கடி முத்திரைத் தட்டுப்பாடு ஏற்படுவதால் பொதுமக்கள் அதிக அளவு விலை கொடுத்தே தனியார் கடைகளில் முத்திரைகளை கொள்வனவு செய்து வருகின்றனர். (இ-10)

### வெருகல் ஊடான போக்குவரத்து துண்டிப்பு

மட்டக்களப்பில் இருந்து வெருகல் ஊடாக திருமலை செல்லும் போக்குவரத்துக்கள் கடந்த ஞாயிறு முதல் ஸ்தம்பித நிலைக்கு வந்துள்ளன.

பனிச்சன்கேணி பாலம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதே இதற்குக் காரணம். (இ-எ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

காமம், கோபம் இரண்டும் மனிதனுக்கு முதல் எதிரி. இவை இரண்டையும் தவிர்த்து வாழ மனிதன் பழகவேண்டும்.

— காஞ்சி முனிவர்

உதயன்
உண்மை — அஞ்சாமை — நடுநிலைமை
இல, 15 2வது ஒழுங்கை, கஸ்தூரியார் நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
08-07-86 த பெ 23

## மாகாண சபைகளின் "சம்பார்" தன்மையை நீக்குக-

அரசாங்கம் சமர்ப்பித்த மாகாண சபை யோசனைகளில் முக்கிய அம்சங்களைக் கடந்த ஒரு வார காலமாக இப்பத்தியில் தனித் தனியே ஆராய்ந்து வந்தோம்.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை ஒட்டியும், அவர்களின் உரிமைகளை வழங்கும் முயற்சியை ஒட்டியும் அந்த யோசனைகள் என்னென்ன விதத்தில் குறைந்திருக்கின்றன, நிர்வாகம் பரவலாக்கம் என்று பார்க்கும் போது, எங்கெங்கே பின்னடைவுகள் உள்ளன என்பவற்றை அவ்வேளைகளில் ஆராய்ந்தோம்.

உத்தேச யோசனைகள் தமிழ் மக்களுக்கு என்ன வகைகளில் சாதக, பாதகமாக உள்ளன என்பதை வாசகர்கள் ஊகித்துக் கொள்வதற்கு இப்பத்தியில் வெளியான அந்த ஆய்வு-நோக்குகள் பெரிதும் உதவி இருக்கும் என்று நம்புகிறோம்.

மக்கள் ஆட்சி முறைகளில் பலவகைகள் உள்ளன. சமஷ்டி ஆட்சியும், ஒற்றை ஆட்சியும் இப்போது பல நாடுகளிலும் நடைமுறையில் உள்ள பிரபலமான முறைகள்.

பல இன, பல மொழி, பல மத மக்கள் வாழும் நாடுகள் பலவற்றிலும் சமஷ்டி ஆட்சி முறையே அமுலாக்கப்பட்டுள்ளது. வேறு பல நாடுகளில் சுயாட்சி அமைப்பும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

ஆனால்—

அரசாங்கம் முன்வைத்து உள்ள மாகாண சபை எந்த அரசமைப்பு முறையைச் சார்ந்தது என்று திட்டவட்டமாக வகுக்க முடியாத ஒரு வடிவத்தில் உள்ளது.

மாகாண மட்டங்களில் அரசாங்கங்கள் அமைக்கப்படும் என்று கூறப்படுகிறது. மத்திய அரசாங்கத்திடம் ஏராளமான அதிகாரங்கள் இருக்கப்போகின்றன. ஆனால் "இது சமஷ்டி ஆட்சி முறையாக இருக்காது; ஒற்றையாட்சிக்கு உட்பட்ட அதிகாரப் பரவலாக்கல் முறையே இது" என்று அரசாங்கம் வர்ணிக்கிறது.

மாகாண சபைகளுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரங்களின் அளவையும், சட்டவாக்க அதிகாரங்களின் தன்மையையும் நோக்கும் போது இது ஒரு சுயாட்சி என்று சொல்வதற்கும் இடம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒற்றை ஆட்சியின் கீழ் அதிகாரத்தைப் பரவல் செய்யும் முறையில் சில படிகள் முன்னேறி மாகாண அரசு அமைக்க வகை செய்யும் ஒரு 'சம்பார்' அரசியல் முறையாக இது அமைந்திருக்கிறது.

இந்தச் 'சம்பார்' தன்மை நீக்கப்படவேண்டும். மாகாண சபைகள் — சமஷ்டி முறையிலா, சுயாட்சி முறையிலா அல்லது ஒற்றை ஆட்சியில் அதிகாரப் பரவல் முறையிலா என்பது குறித்து தெளிவு அவசியம்.

எதிர்வரும் பதினைந்தாம் திகதி கூடும் அரசியல் கட்சிகள் மாநாட்டில் முதலில் இது தெளிவுபடுத்தப்பட வேண்டும். உத்தேச யோசனைகளோடு அரசியல் கட்சிகள் தெரிவிக்கும் கூடுதல் அதிகாரங்கள், விரிவாக்கங்களைப் பரிசீலனை செய்யவும் வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளவும் தயாராக இருப்பதாக, அரசாங்கம் பெருந்தன்மையோடு அறிவித்திருக்கிறது.

மேலே சுட்டிக் காட்டிய குறைபாட்டை,— மாகாண சபைகளின் 'சம்பார்' தன்மையை பல அரசியல் கட்சிகளும் உணர்ந்திருப்பதாக அறிகிறோம்.

இப்போதுள்ள வடிவமைப்பைத் திருத்தி ஆகக் குறைந்தது சுயாட்சி முறையாக ஆவது மாற்ற வேண்டும். அப்போதுதான் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அர்த்தமுள்ள அடிப்படையாக இதனைக் கொள்ளமுடியும்.

மாவிட்டபுரம்

## உற்சவ நாட்களில் இராணுவ நடமாட்டத்தை கட்டுப்படுத்தக் கோரிக்கை

காங்கேசன்துறை, ஜூலை 8

பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகுமபோது பக்தர்களின் நலன் கருதி இராணுவ நடமாட்டத்தை கட்டுப்படுத்த உதவ வேண்டும்.

இப்படி யாழ் அரசாங்க அதிபர் மூலம் இணைப்பதிகாரியைக் கோருவதென முடிவு செய்யப்பட்டது.

மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலய வருடாந்த உற்சவம் குறித்த ஒழுங்குகள் பற்றி ஆராய வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். இராசரத்தினம் தலைமையில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடந்த கூட்டத்திலேயே மேற்கண்டவாறு முடிவு எடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் மாவை ஆதீனகர்த்தர் மகாராஜஸ்ரீ து. ஷண்முகநாதக் குருக்கள், கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான ஆதீன கர்த்தா பிரமஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் மற்றும் காங்கேசன்துறை, தெல்லிப்பளை அபிவிருத்திச் சபை அதிகாரிகள் அரசாங்க நிறுவன அதிகாரிகள், சமூக சேவை மன்றங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கூட்ட ஆரம்பத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். இராசரத்தினம் பேசுகையில், இன்றைய இக்கட்டான நிலையில் இறை பக்தி முக்கியம். மேற்படி ஆலய உற்சவங்கள் ஆடம்பரமற்ற முறையில் அமைதியாக நடக்க சகலரதும் ஒத்துழைப்பு வேண்டும் என்று தெரிவித்தார்.

பகல் உற்சவம் பகல் 12 மணிக்கும், மாலை உற்சவம் 6 மணிக்கும் முடி (4 ஆம் பக்கம் பார்க்க)

வெளி உலகில்

## காமன்வெல்த்திலிருந்து ஸாம்பியா விலகும்

லூசாக்கா, ஜூலை 7

அடுத்த மாதம் லண்டனில் ஆரம்பமாகவிருக்கும் காமன்வெல்த் உச்சி மாநாட்டில், தென் ஆபிரிக்கா மீது பொருளாதாரத் தடைகள் விதிப்பது பற்றி முடிவு எடுக்கப்படாது விடின் ஸாம்பியா வெளியேறும்.

இவ்வாறு ஸாம்பிய ஜனாதிபதி கெனத் கெளண்டா தெரிவித்தார்.

தடைகள் எடுக்க முடிவு எடுக்கப்படாது விடின் இப் பிராந்தியத்தில் கொந்தளிப்பு ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)

## மொறிஷியஸுக்கு இந்தியா கடனுதவி

புதுடில்லி, ஜூலை 7

இந்தியா 5 கோடி ரூபாவை மொறிஷியஸுக்கு கடனுதவியாக வழங்கும்.

இதற்கான ஒப்பந்தம் மொறிஷியஸில் கைச்சாத்தானது.

இந்தக் கடனுதவி இந்தியாவில் தயாராகும் இயந்திரப் பொருள்களை மொறிஷியஸ் நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய உதவும்.

ஏற்கனவே 10 கோடி ரூபாவை மொறிஷியஸுக்கு கடனுதவியாக இந்தியா வழங்கி உள்ளது.

மொறிஷியஸுக்கு இந்தியா ஹெலிகொப்டர் ஒன்றை இலவசமாகக் கொடுத்துள்ளது. (இ-ஒ)

### பெறுமதி குறைந்தது

பீக்கிங், ஜூலை 7

சீன அரசு தனது பணத்தின் பெறுமதியை 16 வீதத்தால் குறைத்துள்ளது. (உ-ஒ)

### அநாதரவான நிலையில் 132 இலங்கையர்

பாங்கொக், ஜூலை 7

வெளி நாடுகளுக்கு வேலை வாய்ப்பைத் தேடிச் சென்ற 72 இலங்கையர் இந்தோனேஷியாவிலும் 60 பேர் தாய்லாந்திலும் அநாதரவாக தவிக்க விடப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாக எக்லோரிடமும் தலா 30,000 ரூபா பணம் பெறப்பட்டிருந்ததாம். (ஒ)

போதை வஸ்து கடத்தல்

## இரு ஆஸ்திரேலியர் தூக்கிலிடப்படுவர்

கோலாலம்பூர், ஜூலை 7

போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட இரு ஆஸ்திரேலியப் பிரஜைகளுக்கு இன்று கோலாலம்பூரில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும்.

இவர்களது தண்டனையை ரத்துச் செய்யுமாறு பிரிட்டிஷ் பிரதமரும் ஆஸ்திரேலியப் பிரதமரும் விடுத்த கடைசி நேர வேண்டுகோளும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பலர் போதை வஸ்து கடத்தல் குற்றத்திற்காக மலேஷியாவில் தூக்கிலிடப்பட்ட போதிலும், இவர்கள்தான் முதன் முதலாக தண்டனை பெறும் வெள்ளையர்கள் ஆவர். போதைவஸ்து கடத்துபவர்களுக்கு பாரபட்சமற்ற வகையில் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற கடுமையான சட்டம் மலேஷியாவில் அமுலில் இருக்கின்றது. (இ-ஒ)

# அக்கினோவுக்கு எதிரான கிளர்ச்சி தோல்வி

## 200 சிப்பாய்கள் சரண்

மணிலா, ஜூலை 7

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி திருமதி கொரசன் அக்கினோவிற்கு எதிராக விடுக்கப்பட்ட பகிரங்க சவால் தோல்வி கண்டது. இச்சவாலுக்கு உடந்தையாகவிருந்த 300 கிளர்ச்சிக்காரச் சிப்பாய்களில் 200 பேர் சரணடைந்தனர்.

திருமதி அக்கினோவைப் பதவி அகற்றி முக்கிய எதிர்க்கட்சிப் பிரமுகரும், முன்னாள் ஜனாதிபதி மார்க்கோஸின் ஆதரவாளருமானதிரு அர்ட்டுரோ டொலன்டீனோவை புதிய காபந்து ஜனாதிபதியாகப் பிரகடனப்படுத்தும் திட்டமும் பிசுபிசுத்தது.

முக்கிய எதிர்க்கட்சித் தலைவரான அர்ட்டுரோ டொலன்டீனோ தம்மைக் காபந்து ஜனாதிபதியாக பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்து 400 கிளர்ச்சிக்காரச் சிப்பாய்கள் அவரை ஆதரித்தனர்.

அத்துடன் திருமதி அக்கினோவிற்கு எதிராக சவாலும் விடுத்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மார்க்கோஸின் பணிப்பின் பெயரில் பிலிப்பீன்ஸில் ராணுவச்சதி ஒன்று பாதுகாப்பு அமைச்சரதும், முப்படைகளின் தலைமையிலும் நடப்பதாக வெளிவந்த வதந்திகள் பொய் என நிரூபிக்கப்பட்டன.

இதனால் இச்சவாலுக்குக் காரணமாயிருந்த சிப்பாய்களில் 200 பேர் சரணடைந்தார்கள்.

திரு டொலன்டீனோ காபந்து ஜனாதிபதியாகப் பதவியேற்க விருப்பதாக அறிவிக்கப்பட்ட மணிலா ஹோட்டலொன்றில் மீதியான 100 கிளர்ச்சிக்காரசிப்பாய்கள் தங்கியுள்ளனர். (ஒ)

### நிமேரி மீது நடவடிக்கை

கார்ட்டூம், ஜூலை 7

எகிப்தில் தஞ்சம் கோரியிருக்கும் சூடான் முன்னாள் ஜனாதிபதி நிமேரியை தமது நாட்டுக்கு மீண்டும் திருப்பி அனுப்புமாறு சூடானிய அரசு கோரியுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற அரசியல் சதி மூலம் பதவியிழந்த நிமேரி எகிப்தில் அடைக்கலம் புகுந்தார்.

அவர்மீது வழக்குத் தாக்கல் செய்வதற்காக சூடானிய சட்டமா அதிபர் தற்பொழுது எகிப்து சென்றுள்ளார். (இ-ஒ)

### விவேகானந்தரின் 125 ஆவது பிறந்தநாள்

கல்கத்தா, ஜூலை 7

சுவாமி விவேகானந்தரின் 125 ஆவது பிறந்த நாள் விழாக்களில் கலந்து கொள்வதற்காக உப ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் கல்கத்தா வந்து சேர்ந்தார். (-ஒ)

### குடியரசு தினம் ஆட்சேப தினம்

இஸ்லாமபாத், ஜூலை 7

பாகிஸ்தானின் குடியரசு தினமான ஆகஸ்ட் 14 ஆம் திகதி ஆட்சேப தினமாக அனுசரிக்கப்படும்.

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவி செல்வி பெனஸிர் பூட்டோ இதனைத் தெரிவித்தார். (ஒ)

## பொருளாதாரத் தடை காமன்வெல்த்தைப் பாதிக்க அல்ல

### ராஜீவ் விளக்கம்

போட் லூயிஸ், ஜூலை 7

தென் ஆபிரிக்க அரசுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்கும் நடவடிக்கை இனஒதுக்கலை அறவே அகற்றுவதற்குத் தான் என்றும் காமன்வெல்த் அமைப்பு நாடுகளின் நலன்களைப் பாதிப்பதற்காக அல்ல என்றும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

மொறிஷியஸ் தீவுகளில் தமது விஜயத்தைப் பூர்த்திசெய்தபின்பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய ராஜீவ் காந்தி மேலும் தெரிவித்ததாவது;

தென் ஆபிரிக்காமீது தடைகளை விதிக்குமாறு உறுப்பு நாடுகளை 'காமன்வெல்த்' கேட்டுக்கொள்ளும்போது தடைகளால் மோசமாகப் பாதிக்கப்படும் நாடுகளுக்கு உதவ காமன்வெல்த்தில் திட்டம் தயாரிக்கப்படவேண்டும்.

லண்டனில் காமன்வெல்த் உச்சி மாநாடு அடுத்தமாதம் ஆரம்பிக்கும்பொழுது இந்த விஷயம் விவாதத்துக்குக் கொண்டுவரப்படும்.

காமன்வெல்த் நாடுகளின் நலன்களைப் பாதிக்காத விதத்தில் தென் ஆபிரிக்கா இனஒடுக்கலை முடிவுக்குக் கொண்டுவருமாறு செய்வதுதான் இந்தத் தடையின் முக்கிய நோக்கமாகும்.

இவ்வாறு ராஜீவ் காந்தி மேலும் தெரிவித்தார். (இ-ஒ)

# மாகாண கவர்னருக்கு நிறைவேற்று அதிகாரம் கூடாது

## அலீஸ் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

மாகாண கவர்னருக்கு நிறைவேற்று அதிகாரங்கள் வழங்கப்படக் கூடாது.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ் மேற்கண்டவாறு ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

முதலமைச்சருக்கே நிறைவேற்று அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். கவர்னர்கள் அரசின் சம்பிரதாய பிரதிநிதிகளாகவே மாகாணங்களில் இருக்கவேண்டும்.

இப்படி ஜனாப். அஸீஸ் ஜனாதிபதியிடம் தெரிவித்தார். (இ-எ)

### ஆறுமாத சிறை

கொழும்பு ஜூலை 8

பாபு, பாக்கியராசா என்ற தீவிரவாதிகள் பற்றித் தகவல் தெரிந்திருந்தும் அதுபற்றி பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கத் தவறிய குற்றத்தை ஒப்புக்கொண்ட மூதூரைச் சேர்ந்த வி. அருளானந்தன் என்பவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. விமலவிக்கிரமசூரியா 6 மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். (உ-எ-2)

## சோதனைக்கு மத்தியில் வேதனையுடன் வாழ்வு

### தமிழர் நிலைபற்றி வண.பிதா

அச்சுவேலி, ஜூலை 8

"தமிழ் மக்களின் வாழ்வு சோதனை நிறைந்தாக வேதனையுடன் நகர்ந்து செல்கின்றது. இதனைக்கண்டு நாம் சஞ்சலப்பட்டாலும் இறை நம்பிக்கையுடன் போராடினால் இறைவன் எமது பக்கத்தில் நின்று வெற்றியை பெற்றுத் தருவான்".

இப்படி வணபிதா ஜீவா போல் கூறினார்.

தோலகட்டி ஆச்சிரமத்தில் சங்கைக்குரிய சகோதரர் வென்ஸஸ்லோஸ் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கடந்த சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிலுவை ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தை நற்செய்தி வழிபாடு நடத்தி வண பிதா ஜீவா போல் ஆரம்பித்து வைத்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது—

மக்களை பாதுகாக்க என்றும் பயங்கரவாதத்தை முறியடிக்க என்றும் கூறிக்கொண்டு எமது பிரதேசத்திற்குள் வந்தவர்கள் இன்று படுகொலைகளை புரிகின்றனர் என்றார்.

எமது மண் வரலாறு காணாத இது இன்று வரை மிழந்து கணப்படுகின்றது பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மக்கள் இன்று அகதிகளாக வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

இரத்த வெள்ளத்தால் மண் சிவந்து கொண்டிருக்கின்றது- என்றும் அவர் கூறினார்.

தென்னிந்திய திருச்சபையின் அச்சுவேலி பங்கு குருவானவர் வணபிதா ஜெயசிங்கம் தமது உரையில் கூறியதாவது:—

மனிதனின் உயிரை எடுப்பதற்கு தனிமனிதனுக்கோ அரசுக்கோ உரிமையில்லை அவ்வாறு உரிமை இல்லாமல் எடுக்கப்படும் சம்பவங்கள் கொலைகள் என வேதம் வலியுறுத்திக் கூறுகின்றது.

மக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசு தமிழ் மக்களை கொலை செய்து துன்புறுத்துகின்றது. இந்த அரசை மக்கள் வெறுக்க வேண்டும் அந்த நாள் வெகுதூரத்தில் இல்லை- எனக் கூறினார்.

பேராசிரியர் நந்தி ... உரை ... (உ-10)

### குருகுல அமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ் மாவட்டத்தில் குருகுல அமைப்பை நெறிப்படுத்த யாழ் மாவட்ட கலாசாரக்குழு முடிவு செய்துள்ளது.

இது சம்பந்தமாக பூர்வாங்க ஆலோசனைக் கூட்டம் ஒன்றைக் கூட்ட குழு முடிவு செய்துள்ளது.

இக் கூட்டத்துக்கு யாழ் மாவட்டத்தில் குருகுலங்களை நடத்துபவர்களை அழைக்க குழு தீர்மானித்துள்ளது. (உ-எ)

### விபத்தில் சிப்பாய் மரணம்

கட்டுநாயக்கா வீதியில் சைக்கிள்களில் வந்து கொண்டிருந்த 2 விமானப்படைச் சிப்பாய்களை மினிபஸ் ஒன்று மோதியது.

இதில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார். மற்றவர் படுகாயம் அடைந்தார். மோதிய மினிபஸ் நிற்காமல் ஓடி மறைந்தது. (... 2)

பொய்யாமொழி



குறள்:

அரும்பயன் ஆயும் அறிவினர் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்

பொருள்:

அருமையான பயன்களை ஆராயவல்ல அறிவை உடைய அறிஞர், மிக்க பயன் இல்லாத சொற்களை ஒருபோதும் சொல்லமாட்டார்.

## சூழ்நிலைகளுக்கு ஏற்ப பிரச்சினைகளுக்கு தீர்வு

### மேலதிக அரச அதிபர் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 8

தற்போதைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள எம் மக்கள் முன்வர வேண்டும்.

யாழ்-மாவட்ட கிராம சேவையாளர் சங்கத்தின் 23 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. இராமநாதர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தகூட்டம் ஞாயிறன்று யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.

மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:-

இனம் சமுதாயத்தின் மத்தியில் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

ஒரு கிராமத்தின் வளர்ச்சி அப்பகுதிகிராம சேவையாளரின் கையில் தான் தங்கி உள்ளது.

கிராம சேவையாளர்கள் தமது பகுதிகளில் உள்ள பிரச்சினைகளைக் கண்டறிந்து அதனைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும்.

இப்படி அவர் மேலும் சொன்னார்.

இந்தக் கூட்டத்தில் போது ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் திரு கே. கே. பேரம்பலத்திற்கு பிரியாவிடை உளிக்கப்பட்டது.

யாழ் தலைமைக்காரியாலய உதவி அரச அதிபர் திரு கே. கோபாலரத்தினம், செயலக உதவி அரச அதிபர் திரு. த. குலசேகரம் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். (உ-10)

### சன்மார்க்க கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம் சன்மார்க்க மகாவித்தியாசாலையில் கல்விப் பொருட்காட்சி கடந்தவாரம் நடைபெற்றது.

யாழ் மாவட்டக் கல்வி அதிகாரி திரு சிவானந்தம் பிரதம அதிதியாகக் கலந்து விழாவை ஆரம்பித்து வைத்தார்.

கல்விப் பொருட் காட்சிக்கான ஏற்பாடுகளை அதிபர் திரு நடேசபிள்ளை சிறப்புடன் செய்திருந்தார். (இ-ஒ)

யாழ். ஆயர் கருத்து:

## தூரத்தே நிற்கிறது கத்தோலிக்க ஆயர் சங்கம்

கொழும்பு, ஜூலை 8

இனப்படுகொலையிலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றும்படி ஐக்கிய நாடுகள் சபையைக் கோர வேண்டிய காலம் வந்துவிட்டது என யாழ். ஆயர் வண. பி. தியோகுப்பிள்ளை தெரிவித்த கூற்று இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் சங்கத்தின் கருத்துக்களைப்பிரதிபலிக்கும் ஒன்றல்ல.

சங்கத்தின் உதவிப் பொதுச் செயலாளர் வண பிதா நீக்டஸ் சருணாரத்தின இப்படிச் சொன்னார்,

வடக்கு கிழக்குப் பகுதியில் பாதுகாப்புப் படையினாலும் போராளிகளினாலும் இழைக்கப்படும் வன்செயல்களினால் அப் பகுதி மக்கள் மத்தியில் எழுந்துள்ள மனவேதனையின் வெளிப்பாடாகவே யாழ் ஆயரின் கூற்றை நாம் கருதவேண்டும்.

ஜனாதிபதியின் சமாதான தீர்வு யோசனைகளை நிறைவேற்ற உதவிக்கவேண்டுமென்றும் -

இதுதொடர்பாக இந்திய அரசும் திருப்தி தெரிவித்திருப்பதால் எமது பிரச்சினையைத் தீர்க்க வேறு இடங்களை நாம் நாடத் தேவையில்லை - இப்படி அவர் மேலும் கூறினார். (உ)

### ஜனாதிபதியுடன் சந்திப்பு

மாகாணசபை யோசனைகள் சம்பந்தமாக லங்கா சமசமாஜத் தலைவர்கள், நவலங்கா சமசமாஜத் தலைவர்கள் ஆகியோர் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை இன்று 8 ஆம் திகதி சந்திக்க உள்ளனர். (இ-எ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YOUR FRIENDS IN
FINANCE
SHABRA
நிதித்துறையில்
உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
Shabra Unico Finance Ltd.

# உதயன்

08 07 1986 செவ்வாய்க்கிழமை

YOUR FRIENDS IN
FINANCE
SHABRA
நிதித்துறையில்
உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
Shabra Unico Finance Ltd.

## மரமுந்திரி உற்பத்தி பெருமளவு வீழ்ச்சி

கொழும்பு, ஜூலை 8

மர முந்திரி உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மரமுந்திரிகைத் தோட்டங்கள் தற்சமயம் செயலிழந்து உள்ளன.

தீவிரவாதச் செயல்கள் காரணமாக தோட்டங்கள் செயல்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

நாட்டின் முந்திரிகை உற்பத்தியில் 60 சதவீதம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்தே வந்தது.

இலங்கை முந்திரிகைக்கு உலகநாடுகளில் நல்ல வரவேற்புள்ளது. (இ-ஏ-3)

### வர்த்தகர்...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

கூட்டம் இம்மாதம் 19 ஆம் திகதி சனி பிற்பகல் 2. 30 மணிக்கு பாரதி பாலர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இது சம்பந்தமான தீர்மானம் 6. 7. 86 இல் நடந்த சங்கச் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. (இ-எ)

The Centre Of The City
"WHERE ELSE"
On Saturday and Sunday
BEER GARDEN NIGHT
A/C or NON A/C ROOMS
RANGING FROM RS. 50/- to RS. 200/-
CHINESE MEALS
RANGING FROM RS. 25 - to RS. 40/-
ALSO
COOL DRINKS,
HOT DRINKS
SHORTEATS & LUNCH
இவற்றுடன், உங்கள் உடலுக்கும் உள்ளத்திற்கும் புதிய தெம்பை அளிக்க காலை 9-30 மணி முதல் இரவு 11-30 வரை சேவை செய்யக் காத்திருக்கிறது
ஹோட்டல்
ஞானம்ஸ்
299. மணிக்கூட்டு வீதி.
யாழ்ப்பாணம்.

J.C.C.
தனது புதிய சேவைகளுக்கு
உங்களை அன்புடன்
அழைக்கின்றது!
உரும்பிராய் சந்தைக்கு முன்னால் உள்ள மாடிக் கட்டிடத்தில் வருகிற புதன்கிழமை (9-7-86) முதல் பின்வரும் சேவைகளை வழங்குகின்றது.
காலை 7.45 மணிக்கு விற்பனையை
திரு. ந. மகாலிங்கம் (மகான்)
அவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள்.
1. உங்களுக்குத் தேவையான துவிச்சக்கர வண்டிகள், சைக்கிள் உபகரணங்கள் மற்றும் பிளக் வகைகள்.
2. பரிசளிப்பதற்கும் வீட்டுப் பாவனைக்கும் ஏற்ற எவர் சில்வர் பாத்திர வகைகள், பிளாஸ்ரிக் சாமான்கள்.
3. கல்லூரி மாணவிகளுக்கும், நங்கையருக்கும் தேவையான குங்குமம், லேஸ், றீபன், தொப்பி, சட்டைப் பொத்தான்கள், கிளிப், சாந்துப் பொட்டு இன்னும் பல அத்தியாவசியமான பொருட்கள்
4. கல்லூரிகளுக்குத் தேவையான அப்பியாசப் கொப்பிகள், உபகரணங்கள், பொலித்தீன், பிறிஸ்டல்போட், மற்றும் பல அத்தியாவாசியமான பொருட்கள்,
5. சிறுவர்களுக்கான விளையாட்டுச் சாமான்கள்.
6. இன்ப, துன்ப நிகழ்ச்சிகளுக்கு தேவையான தகரக் கொட்டகைகள் இரும்புக் கதிரைகள் — வாடகைக்கு. மேலும் பல.
உங்கள் இனிமையான ஆதரவை பணிவுடன் நாடும்
J.C.C. நிறுவனம், உரும்பராய் சந்தி, உரும்பராய்

# மாகாணசபை

## பிரிவினைக்கு வழிவகுக்கும்

### சிறிமா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 8

மாகாணசபை யோசனைகள் நாட்டுப் பிரிவினைக்குத்தான் வழிவகுக்கும். இந்தயோசனைகள்பற்றிய சுதந்திரக் கட்சியின் முடிவு மக்கள் முன் வைக்கப்படும். இப்படி சுதந்திரக்கட்சித் தலைவர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

நீர்கொழும்பு நகரில் நடைபெற்ற சுதந்திரக் கட்சிக்கூட்டத்தில் திருமதி பண்டாரநாயக்கா பேசினார்

திருமதி பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது:-

மாகாணசபை யோசனையின்படி ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாண அரசாங்கம் நிறுவப்பட இருக்கின்றது இது பிரிவினைக்கு வழிவகுக்கும்.

புதிய யோசனைகளை சில தீவிரவாதிகள் ஏற்கலாம்; சில தீவிரவாதிகள் ஏற்க மறுக்கலாம்.

'இந்தியா ருடே'க்கு அளித்தபேட்டியில் தமிழ் ஈழத்துக்குக் குறைந்த எதையும் ஏற்கப்போவதில்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் கூறியிருக்கிறார்.

அப்படி என்றால் மீண்டும் யுத்தம்தானா?

இந்த அரசாங்கத்தினால் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது

இப்படி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னார். (இ-எ-2)

## இராணுவத்தில் சேரும் முயற்சியால் இருவர் தற்கொலை!

கொழும்பு, ஜூலை 8

இராணுவத்தில் சேருவது சம்பந்தமான தகராறு காதலன் — காதலி தற்கொலையில் முடிந்தது.

பதுளையில் நடந்த இச்சம்பவம் பற்றிய மரண விசாரணையில் தற்கொலை செய்து கொண்ட பெண்ணின் தந்தை வாடுகே செனவிரத்ன சொன்னதாவது;-

எனது மகள், சமித் என்ற இளைஞன் மீது காதல் கொண்டிருந்தாள்.

இராணுவத்தில் சிப்பாயாகப் பணியாற்ற சமித் விரும்பினான். அதை எனது மகள் விரும்பவில்லை.

சிப்பாயாக திருமலை சென்று பணிபுரிய சமித் ஆயத்தம் செய்தார்.

' திருமலை செல்ல வேண்டாம். அங்கு நிலக்கண்ணி வெடித்தாக்குதலில் சிப்பாய்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள்''—இப்படிக் கூறி எனது மகள் சுமித்தைத் தடுத்தார்.

சுமித் கேட்கவில்லை. இதனால் மனவிரக்தியுற்ற எனது மகள் நஞ்சைக் குடித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

இதைக் கேள்விப்பட்ட சமித்தும் பின்னர் நஞ்சு அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

இப்படி அவர் சாட்சி சொன்னார்

தற்கொலைகள் என்று பதுளை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு ஏ. பண்டிதரத்தின தீர்ப்பளித்தார். (இ-எ-2)

### மீன்பிடிக்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படகு ஒன்றில் சென்ற மூன்று மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்

அப்பொழுது ஹெலிகொப்டர் ஒன்று இவர்களுக்கு மேலால் தாழப் பறந்து சென்று மண்டை தீவில் இறங்கியது

பின்னர் ஹெலிகொப்டர் மண்டை தீவில் இருந்து பறந்து சென்றதை அடுத்து இந்த மீனவர்கள் மீது மண்டைதீவு முகாமிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது

இதனால் நவரத்தினம் மரியதாஸ் (34வயது)என்பவர் காயமடைந்தார்.

மற்றைய இருவரும் கடலுக்குள் குதித்து விட்டதால் மயிரிழையில் உயிர் தப்பினர்.

பின்னர் காயமடைந்தவர் யாழ் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

இவருக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டுள்ளது. (இ-எ-10)

### இந்திய...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

இப்படியான செயல் இடம் பெற்றிருக்கக் கூடாது.

இனியாவது இம் மாதிரியான செயல்கள் இடம் பெறுமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இப்படி இந்தியத் தூதர் இலங்கை வெளியுறவு அமைச்சைக் கேட்டுக் கொண்டார்.

இதனிடையில் இச்சம்பவம் குறித்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டிருப்பதாக இலங்கை வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-எ)

### மன்னார் - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லட்சம் ரூபா என மதிக்கப்பட்டுள்ளது,

தீயில் நாசமான கடைகளில் சில பின்வருமாறு:-

மலர் ஸ்ரோர்ஸ், தாமோதரா ஸ்ரோர்ஸ், எம். பி. கணபதிப்பிள்ளை ஆயுள்வேத மருந்துச் சாலை, செல்வம் பிறதர்ஸ், பாக்கீர் முகைதீன் பயிற்றுக்கடை, எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த முஸ்லீம் வர்த்தகருடைய கடை. (இ-6)

### மாங்கேணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மவர்கள் பல நவீன ரக ஆயுதங்களை உபயோகித்தனர்.

பனிச்சங்கேணி, காயங்கேணி பாலங்களும் எம்மவர்களால் தகர்க்கப்பட்டன.

இதனால் வேறு முகாம்களில் இருந்து இம்முகாமிலுள்ளவர்களுக்கு தரை வழியாக உதவிகள் கிடைப்பதில் பெருத்த தடை ஏற்பட்டது.

3 பொம்பர்களினதும், 2 ஹெலிக்கொப்டர்களினதும் குண்டு வீச்சுக்களின் மத்தியிலும் எம்மவர் எதுவித இழப்புகளும் இன்றி முகாம் திரும்பினர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வாக்குமூலம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலத்தை திரித்து எழுத முயற்சி மேற்கொள்ளப்பட்டதாம்.

போராளிகள் இதனை முறியடித்துவிட்டனர்.

இவரிடம் வாக்குமூலம் பெற வந்த பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் சிலரே இவரின் வாக்குமூலத்தை திரித்து மாற்றி எழுத முயன்றனர் என்று கூறப்படுகிறது. (இ-10)

### ஜீ. சி. ஈ..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ணங்களுக்கு தபால்கள் கணக்கமாகச் செல்லுவதின் காரணமாகவே அனுமதிப்பத்திரங்கள் முன்னதாக அனுப்பப்பட்டுள்ளன என்று பரீட்சைத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பரீட்சை ஆகஸ்ட் 1ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

வினாத்தாள்கள் விமானம் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளன (இ-எ-2)

### உற்சவ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வடையும் என ஆதீன கர்த்தா தெரிவித்தார்.

12 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் உற்சவத்தில், 16 ஆம் திகதி திருநடனமும், 21 இல் திருமஞ்சமும், 30 இல் திருக்கார்த்திகை உற்சவமும், ஆகஸ்ட் 2 இல் வேட்டைத் திருவிழாவும், 3 இல் பெரிய சப்பறமும், 4 இல் தேர் விழாவும், 5இல் ஆடி அமாவாசைத் திருவிழாவும், 6 இல் பழனியாண்டவர் உற்சவமும் நடைபெறவிருக்கின்றன. (இ-68)

விளையாட்டரங்கு

17 வயதுப் பிரிவு

## யாழ் இந்து அணிக்கு நாலாவது ஆட்டத்திலும் வெற்றி-

— அலுவலக விளையாட்டுச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதுப் பிரிவு கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் நாலாவது ஆட்டத்திலும் யாழ் இந்துக் கல்லூரி அணி வெற்றியீட்டியது.

நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை யாழ் இந்துக் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் தோற்கடித்தது.

வட்டுக்கோட்டை 'டிக்நெல்' விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்த அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது

ஸ்ரீபதி 29 ஓட்டங்களையும் மதியழகன் 19 ஓட்டங்களையும்பெற்றனர்,

மின்னலென பந்துகளை விசிய கே எஸ் ரவிக்குமார் 33 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களையும் பி, பிரபானந்தன் கே. ஜெனகன் ஆகியோர் முறையே 24, 18 ஓட்டங்களுக்கு தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ் இந்து அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது

ஞானமோகன் சிறப்பாக ஆடி ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும், ரி கே புவனேந்திரன். எஸ் திலீபன் ஆகியோர் முறையே 25. 23 ஓட்டங்களையும் பெற்றனர்

என். நித்தியராஜன் 48 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஜெயசீலன். கிறிஸ்தோபர்ரூ ஆகியோர் முறையே 12, 17 ஓட்டங்களுக்கு தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காகமீண்டும் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக்கல்லூரி அணி ஆட்டநேர முடிவில் 5 விக்கெட்டுக்களை, இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது.

என். நித்தியராஜன் 17 ஓட்டங்களைப் பெற்றார். கே. எஸ். ரவிக்குமார், ரி. கே. புவனேந்திரன். எஸ் கணேசராசா, எஸ். திலீபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்திற்கு என். எஸ். சிவஞானசேகரம், என். எம். பரமேஸ்வரன் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

யாழ் இந்து அணி இதற்கு முன்னர் நடைபெற்ற மூன்று ஆட்டங்களிலும் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-7

### நித்திரையில் துப்பாக்கிச்சூடு

மட்டக்களப்பு, ஜூலை 8

வாகரைக் கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு வீடு ஒன்றினுள் புகுந்த ஆயுதந்தாங்கிய கோஷ்டி ஒன்று நித்திரையில் இருந்த தாய், மகன் மீது துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தது.

மகன் ராசலிங்கம் உயிரிழந்தார் தாயான அருளம்மா வாகரை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். (இ-எ-21)

### இந்தியா...

(1-ம பக்கத் தொடர்ச்சி)

இந்தியா இலங்கை அரசிடம் கேட்டிருந்தது.

கொழும்பில் உள்ள இந்தியதூதுவர் திரு. ஜே என். டிக்ஸித் நேற்று அரசாங்க உயர் தலைவர்களைச் சந்தித்து விளக்கங்களை நேரில் எழுத்தில் பெற்றார்.

தாம் குறிப்பு வடிவத்தில் பெற்ற விளக்கங்கள் தான் இன்று(செவ்வாய்) புதுடில்லிக்குக் கிடைக்கும் எனத் திரு. டிக்ஸித் நேற்றுக் கொழும்பில் தெரிவித்தார்.

இதனிடையில் நேற்று 7-7-86 இல் வெளியான 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் வெளியான செய்தி ஒன்றில் புதுடில்லி வந்துள்ள கூட்டணித் தலைவர்கள் அரசியல் கட்சிகள் மாநாட்டில் கலந்து கொள்ளக் கொழும்புக்குச் செல்லக் கூடும்—என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

"இலங்கைத் தமிழ் மக்களின் தாயகம் பற்றி புதிய யோசனைகளில் கூறப்படவில்லை. ஆகவே புதிய யோசனைகளை ஏற்க முடியாது என்று போராளி அமைப்புக்கள் கூறியுள்ளன" என்றும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இன்னொரு செய்தியில் தெரிவித்தது.

தமிழர் தாயகம் பற்றிக் கூறப்படாத எந்த யோசனையையும் நாம் ஏற்க முடியாது என்று போராளி அமைப்புக்கள் கூறிவிட்டனர் என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஆ-எ-2)

### நாவற்குழி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதி பெற்றே தொடர்ந்து பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது

எனினும் ஆனையிறவில் உள்ள சிப்பாய்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் டஸ்களை நாவற்குழி இராணுவ முகாம் முகாமைக்கு உள்ள வீதியால்

### ஆசிகுளம்--

1-ம் பக்கத் தொடர்ச்சி)

200 க்கும் அதிகமான இளைஞர்களைக் கைது செய்து ஆசிக்குளம் தமிழ்க் கலவன் பாடசாலையில் வைத்திருந்தனர்.

அதன் பின் அங்கு கைதானோர் மத்தியில் உயர் அதிகாரி ஒருவர் உரை நிகழ்த்தினார்.

"பயங்கரவாதிகளை ஒழித்துக் கட்டவே நான் தலைமைவகித்து உங்களிடம் வந்துள்ளேன்'' என்றார் அவர்

கைதானவர்களின் தாய் தந்தையர் இணைப்பதிகாரி முன் வந்து கண்ணீர் விட்டுக்கதறி அழுதனர்.

இதனை அடுத்து கைது செய்யப்பட்டவர்களில் 12 பேரை மட்டும் வைத்துக் கொண்டு மிகுதியானோரை அவர்கள் விடுதலை செய்தனர். இந்த 12 பேரிலும் அறுவர் பின்பு முகாமில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர். (இ-6)

### முகாமில்...

வர வேண்டும் எனவும். முகாமில் கையெழுத்து வாங்கி வர வேண்டும் எனவும் கேட்கின்றனராம்

இதனால் சில பஸ்கள் நேற்று நாவற்குழி முகாம் பாதையூடாக போக்குவரத்தை நடத்தின. (இ-10)

### 9 சடலங்களும் கரை ஒதுங்கி விட்டன

வேலணை, ஜூலை 8

தீவுப்பகுதி கரையோரங்களில் இதுவரை ஒன்பது சடலங்கள் கரை ஒதுங்கி உள்ளன.

கடைசியாக, மூன்று ஆண்களின் சடலங்கள் கரை ஒதுங்கின

இவை அனைத்தும் விடுதலைப் போராளிகளால் உடனுக்குடன் தகனம் செய்யப்பட்டன.

இலங்கைக் கடற்படையினரால் நடுக் கடலில் வைத்துக் கொலைப்பட்ட 9 இந்திய மீனவர்களின் சடலங்களே இவை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

### யாழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரத்து ஒரேயடியாக ஸ்தம்பிக்கும் அபாயம் உருவாகி வருகிறது

இதேவேளை பலாலியில் பாஸ் பெறும் திட்டம் மாற்றப்படமாட்டாது என்றும் —

முதல்முறை எப்படியும் அங்கு போய்த்தான் பாஸ் பெற வேண்டும் என்றும் அதற்கடுத்த முறைகளில் வேண்டுமானால் கோட்டை முகாமில் வைத்துப் பாஸ் வழங்குவது குறித்து ஆராயப் படலாம் — என்றும் சொல்லப்படுகிறது. (அ-5)

பாதுகாப்பான சூழலில் ரெலிபோன் பேச "ரெலிகுளோப்"
ஆர். ஜி. கட்டிடம். ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 25088 - 6 தொடர்புகள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாம் ... உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ... அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 08—07—1986.
Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15 ... Registered as a Newspaper at the General Post Office Srilanka under number Q J 60 N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org